5. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51 முதல் 57 வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக்குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு—பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய குழுக்களை மேலும் ஓராண்டு நீட்டிப்பது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195-ன்கீழ் 2, 203-ன்கீழ் 3, 211-ன்கீழ் 3 மற்றும் 256-ன்கீழ் 2 ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை பணியாற்ற வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.